<u>ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்</u>
<u>பயிற்சி இயக்ககம்,</u>
<u>தமிழ்நாடு</u>

**செய்திக் குறிப்பு**

தமிழகத்தில் சமச்சீர் கல்வியை செயல்படுத்துவதன் முதல் கட்டமாக ஒன்று முதல் பத்து வகுப்பு வரை புதிய பாடத்திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கி உள்ளது. கல்வி வல்லுநர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், மெட்ரிக் பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளின் ஆசிரியர்கள் உட்பட 150 பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். தயாரிக்கப்படும் புதிய பாடத்திட்டம் தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் கூற விரும்புபவர்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது.

**இயக்குநர்,**
**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்,**
**டி.பி.ஐ. வளாகம், கல்லூரி சாலை,**
**சென்னை – 600 006.**

**dtert@tn.nic.in** என்ற மின்னஞ்சல் (E-mail) வழியாகவும் தெரியப்படுத்தலாம்.

பெறப்படுகின்ற கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, தேவையின் அடிப்படையில் பாடத்திட்டம் தயாரிக்கும் பணியில் பயன்படுத்திக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**இயக்குநர்**